# செங்கோட்டை நகராட்சி

## 14.05.2020 அன்று நடைபெற்ற அவசரக் கூட்டத்தின் தீர்மானங்கள்

மன்றப்பொருள்..1

செங்கோட்டை நகராட்சி கே.சி.சாலையில் உள்ள அரசு மருத்துவமனையில் 14.05.2020 அன்று நடைபெற்ற கடையநல்லூர் சட்டமன்ற தொகுதி உறுப்பினர் அவர்கள் ஆய்வுக் கூட்டத்தில் அரசு மருத்துவமனை முன்புறம் உள்ள சிறுபாலம் பழுதடைந்துள்ளதால் கழிவு நீர் செல்ல இயலாத நிலை உள்ளது. மழைகாலங்களில் அடைப்பு ஏற்பட்டு கழிவு நீர் சாலையில் செல்வதால், பொது மக்கள் மற்றும் வாகனங்கள் சென்று வர மிகுந்த இடையூறாக இருப்பதால் உடனே சரி செய்ய அறிவுறுத்தப்பட்டதன் அடிப்படையில் ரூ. 2.20 லட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டதற்கும், மேற்படி செலவினத்தை நகராட்சி வருவாய் மற்றும் மூலதனநிதியில் மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு..

1. பொதுமக்களுக்கு மிகவும் இடையூறாக இருந்து வரும் சிறுபாலத்தை அவசியம் அவசரம் கருதி பழுது நீக்க மன்றம் ஒப்புதல் வழங்கலாம்
2. மேற்படி செலவினத்தை நகராட்சி வருவாய் மற்றும் மூலதனநிதியில் மேற்கொள்ளலாம்.

தீர்மானம் எண். 229

அனுமதி வழங்கப்பட்டது.

மன்றப்பொருள்..2

செங்கோட்டை நகராட்சியில் அம்மா உணவகத்தில் 2015 -ல் பெறப்பட்ட பொருட்கள் தற்போது பராமரிக்க முடியாத அளவுக்கு மிகவும் பழுது ஏற்பட்டு விட்டபடியாலும், தற்போது கொரோனா 2019 நோய் தொற்று பரவாமல் இருப்பதற்கு அம்மா உணவகம் மூலமாக மூன்று வேளையும் பொதுமக்களுக்கு உணவு வழங்கப்படுகின்ற இவ்வேளையில் எவ்விதமான தடைகளும் ஏற்படாத அளவுக்கு கீழ்க்கண்ட பொருட்கள் அவசர அவசியம் கருதி உடனடியாக கொள்முதல் செய்யப்பட வேண்டிய நிலையில் உள்ளது. தற்போது ஒப்பந்தப்புள்ளி ஏதும் கோரி பெறப்படும் நிலையில் இல்லை எனவே, அரசு கடிதம் 74/ஜேஎஸ்(எம்.ஏ)நிதி ஊதியம் 2020 நாள். 01.04.2020-ன் வழிகாட்டுதல் நெறிமுறைகளின்படி நோய் தொற்று காலத்தில் மிகவும் அத்தியாவசிய பொருட்களை கொள்முதல் செய்வதற்கு எந்த ஒரு ஒப்பந்த அழைப்பும் இன்றி பெற்றுக் கொள்வதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. எனவே, அம்மா உணவகம் தடையின்றி நடப்பதற்கு கீழ்க்கண்ட பொருட்களை உடனடியாக கொள்முதல் செய்து வழங்குவதற்கு இந்நகராட்சியின் பதிவு பெற்ற ஒப்பந்தக்காரர் திரு. தா.ஆபேல்ஜெயசீலன் மூலமாக

பொருட்களை பெறுவதற்கும் அதற்கான முழு செலவினத்திற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

தேவைப்பொருட்கள்.

1) கேஸ் அடுப்பு (பெரியது)
2) குக்கர் (20 லிட்டர்) தரமானது
3) இட்லி கொப்பறை 1 (150 இட்லி வேகவைக்கப்படுவது)
4) டவ்வி 2 மற்றும் தட்டு (10 கிலோ வேகவைக்கப்படுவது)
5) எடை மிஸின்
6) பக்கெட் 3 (ஈயம்)
7) இருப்பு சட்டி (கடாய்) 1 பெரியது
8) ஹாட்பாக்ஸ் -2 (300 இட்லி வைப்பதற்கு தகுந்தாற் போல்)
9) சில்வர் சட்டி 2 (5 கிலோ கொள்ளளவு கொண்டது)
10) சில்வர் கரண்டி - 5 (பெரியது)

அலுவலக்குறிப்பு..

மன்றம் அனுமதி வழங்கலாம்.

தீர்மானம் எண். 230 அனுமதி வழங்கப்பட்டது.